# இதய அஞ்சலி



## செல்வன் ஜோண்சன் விதுாஷனன்

(மாணவன் தரம் 1 – யாழ்.புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை)

பறந்து திரிந்தவோர் சிட்டொன்று பறக்க மறந்ததுவோ!
நினைக்க முடியவில்லை இது நிஜந்தானோ?
நிறைவாய் பலகதைகள் எம்முடனே பகிர்ந்திட்டாய் - உன்
பிஞ்சுமுகம் தடவி அன்னை கொஞ்சி வளர்த்திட்டாள்.
யாரறிவார் இந்நிலையை – பாலகனே!
பாதைவழி பார்த்திருந்தோம் உன் வரவை .........
பொல்லாத சேதியொன்று பாதிவழி வந்ததைய்யா!
செய்யாத முயற்சியில்லை, வேண்டாத தெய்வமில்லை – நாம்
உன்னுயிரை காப்பதற்கு! வேறென்ன செய்வோமையா!!
சிட்டாகப் பறந்த நீ சிறகொடிந்து வீழ்ந்தாயோ - இனி
கிட்டாது எமக்கு உன் முகத்தைக் காண்பதற்கு
வாழ்வாங்கு வாழ்வாய் நீ விண்ணுறையும் தெய்வத்துள்ளே!

**உன் பிரிவால் துயருறும்**
**உறவுகள்**

# கண்ணீர் காணிக்கை



**எமது கல்லூரி ஆசிரியர் திரு.எம்.ஜே. ஜோண்சன் அவர்களின்**
**அன்பு மகன் விதுஷனன் அவர்களின்**
**அகால மறைவு செய்தி கேட்டு விடிவின்றி இருளானோம்**

மலரொன்று உதிர்ந்தால்
இயற்கையென ஆற்றிடலாம்
மொட்டொன்று உதிர்ந்ததனால்
ஆற்றாது துடிக்கின்றோம்
இலையொன்று சருகானால்
நியதியென விட்டிடலாம்
தளிரொன்று கருகியதால்
ஆற்றாது விம்முகின்றோம்
விதுஷணனின் சாவிற்கு
விதியென அமைதிகொள்ள
................
.....................மனமின்றி
..............
விடிவின்றி இருளானோம்

**பிரிவால் துயருறும்**
**யாழ் மத்திய கல்லூரி சமூகம்**

# கண்ணீர் காணிக்கை!



**எமது நிறுவன ஆங்கில ஆசிரியர்**
**திரு.ஜோண்சன் அவர்களின் அன்புச் செல்வம்**

## செல்வன் ஜே.பி.விதுாஷனன்

(மாணவன், புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

தாமரை அழகென்ன அழகு
தரணியில் இவன் முகத்தழகு!
குயிலினத்தின் ஓசையென்ன ஓசை
இவன் குரலோசை கேளாத செவிக்கு!

பனித் துளிபட்ட மலர் வதனம்!
விதுாசனனின் எழில் கோலம்
தனித்துவம் மிக்க இவன் துடிப்பு!
தரணியில் எவர்க்கு இனிவரும்.

அழுது புலம்பி ஆண்டவனை வேண்டினோம்
அடியோடு மறுத்துவிட்டான் அழகைத் தர
பஹ்ரீமியில் பஹ்ரீத்தமலர் வாடியது கண்டு
புருவம் உயராத கண்களே இல்லை!

பாசத்தால் கட்டுண்ட பிதாவையும்
அன்பால் அரவணைத்த அன்னையையும்
உருவகத்தால் ஒத்த உன் அண்ணனையும்
உலகினில் விட்டுச்செல்ல மனமெப்படி வந்தது.

**உன் ஆத்மா சாந்திபெற்று எம்மிடம் மீண்டும் வருவாய் என்று**
**நம்பிக்கையோடு இறைவனை வேண்டிநிற்கின்றோம்.**

**இயக்குநர்**
**ஆசிரியர்கள், மாணவர்கள் (சயன்ஸ் அக்கடமி, நல்லுார் - அரியாலை)**

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

கலைமணி லேன், கட்டைப்பிராய், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

# செல்வன் ஜோண்சன் விதுசனன்





அன்புடன் வளர்த்த பெற்றோர்களை தவிக்கவிட்டு
நண்பர்கள், உறவுகளை கதிகலங்க வைத்து
உறங்கிவிட்டதேனோ? உருக்குலைந்த நிலையில் உன்
பெற்றோர் அழும்போது எம் உள்ளம் உருகுதையா
உன்னைப் படைத்தவனே சிறிய பருமனிலேயே
எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ?
உறைந்து நிற்கும் உன் உறவுகளோடு
சேர்ந்து கண்ணீர் மல்க நிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருளும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**H.N.B. Assurance, Jaffna.**

# கண்ணீர் அஞ்சலி

## எமது வகுப்பாசிரியர் எம். ஜோண்சன் அவர்களின் செல்வப் புதல்வன் விதுஷனன்

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனிதரின் மாணிக்கமாய்
வாழ்ந்த அவரின் இன்ப
வாழ்க்கை ஆத்மா
சாந்தியடைய இறைவனிடம்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

துயரத்தால் துடிக்கும்
**8A** மாணவர்கள்.